REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆனி 2உ வியாழன் (16—6—55) ★ ★ வெளியூர்: ஆனி 3உ வெள்ளி (17—6—55) [இதழ் 2

நீதிமன்றத்தில் மணப்பெண்கள்!

மண அலங்காரத்துடன் கூடிய பத்தொன்பது சிறுமிகளை, நீதிமன்றத்தில் கொண்டுவந்து வரிசைக்கிரமமாக நிறுத்தி வைத்து விட்டார் அகமதாபாத் மாஜிஸ்திரேட். 5 முதல் 16 வயதுடைய சிறுமிகள் அக்கூட்டத்தில் இருந்தனர்.

அவர்களுக்குத் திருமணம் நடந்த இருந்ததைத் தடுக்குமாறு ஒரு 'சமூக ஊழியர் மாஜிஸ்திரேட்டிடம் கோரினதன் விளைவாகவே மேற்படி சம்பவம் நிகழ்ந்திருக்கிறது.

அக்கூட்டத்தில் 16 வயதுடைய பெண்ணொருத்தியின் திருமணத்தை மட்டும் அனுமதித்துவிட்டு சாரதா சட்டத்தின்கீழ் மற்ற சிறுமிகளின் திருமணத்திற்குத் தடை விதிக்கப்பட்டது!

மனமுடைந்த மாப்பிள்ளைகள் வீடு திரும்பினர்!

'மற்ற மாநிலங்களைவிட சென்னை பின்தங்கிக்கிடக்கிறது'

'எங்கள் மாநில நிலையை இந்தியப் பேரரசு ஒழுங்காக உணரவில்லை'

'என்னூரில் கப்பல் கட்டும் தொழில் ஏற்படுத்துக'

தென்னிந்திய வியாபார சங்கத்தின் விண்ணப்பம்

சென்னை, ஜூன் 16—

"தொழில் துறையில், மற்ற மாநிலங்களைவிட, சென்னை மாநிலம் மிகமிகத் தொலைவில் பின்தங்கிக் கிடக்கிறது.

"வட்டாரவாரியாகத் தொழில்களை நிர்மாணிப்பதின் தேவையை, இன்னமும் இந்தியப் பேரரசால் ஒழுங்காக உணர்ந்துகொள்ள முடியவில்லை.

"எனவே, இந்த மாநிலத்தில் நிலவிவரும் தொழில் துறை பிற்போக்குத் தன்மையை, மேலும் மேலும் வலியுறுத்திக் கூறவேண்டியதாகிறது.

"உத்தேசிக்கப்பட்டுள்ள பெருந் தொழில்களில் சில வற்றையாவது இங்கு நிறுவினால் அல்லாது, இம்மாநிலத்தின் தொழில் துறை பிற்போக்கு நிலைமை நீடித்தே இருக்கும்.

"நீண்ட கடற்கரையைக் கொண்டுள்ள இம்மாநிலம் ஒரு கப்பல் கட்டும் தொழிலைக் கண்டிப்பாகப் பெற்றிருக்க வேண்டும். அந்தத் தொழில் நிலையம் என்னூர் பகுதியில் ஏற்படுத்த வேண்டும்.

'இம்மாநிலத்தின் பெரும் முட்டுக்கட்டையாக இருந்து வருவது, இங்கு ஒரு உருக்கிரும்புத் தொழிற்சாலை இல்லாத தேயாகும்.

"தோல் உற்பத்தியில் முதலிடம் பெற்றுள்ள இப் பகுதியில், ஒரு தோல் பொருள் உற்பத்தித் தொழிற்சாலை நிறுவப்பட வேண்டும்."

இக்கோரிக்கைகளை, தென்னிந்திய வியாபார சங்கம், அரசாங்கத்திற்கு அளித்திருக்கிறது.

சங்கம் கொடுத்துள்ள விண்ணப்பத்தில் மேலும் பல தொழில்கள் பற்றிய விவரத்தைக் குறிப்பிட்டுள்ளது.

நடுத்தர, சிறு தொழில்களைத் துவக்குவதற்கான அறிவுரை அளிக்க, ஒரு நிபுணர் ஆலோசனைக் குழுவை நிரந்தரமாக உருவாக்க வேண்டுமெனவும், அக்குழு கூறும் யோசனைக்கு குறைந்த பட்ச கட்டணத்தை அரசாங்கம் பெற்றுக்கொள்ள முன்வர வேண்டும் எனவும், அவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இயந்திரங்களை உற்பத்திச் செய்யும் மத்திய கன ரகத் தொழிற்சாலையும், இம்மாநிலத் தேவைகளில் ஒன்றாகும் எனவும், புகை வண்டிகளுக்குத் தேவையாக உள்ள கருவிகளை உருவாக்கித் தரும் மத்திய தொழிற்சாலை ஒன்றும் இங்கு நிர்மாணிக்க வேண்டும் எனவும், தென்னிந்திய வியாபார சங்கம் தனது கோரிக்கை மனுவில் குறிப்பிட்டிருக்கிறது.

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில், தங்கள் கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது, விண்ணப்பத்தின் முழு நோக்கமாகும்.

நந்திகொண்டா அணைத் திட்டத்தைக் கட்டி முடிப்பதற்கு, அதாவது கிருஷ்ணா நதிக்குக் குறுக்கே அணையைக் கட்டி, இரண்டு கால்வாய்களை வெட்டுவதற்கு மொத்தம் ரூ. 75 கோடி செலவாகுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

ரஷ்யப் பகுதியில் நேரு

டாஸ்சென்ட், ஜூன் 14—

இந்தியப் பிரதமர் நேரு, மத்திய ஆசியக் குடியரசு நாடான உஸ்பெக்கிஸ்தானின் தலைநகரான டாஸ்சென்ட் சென்றிருக்கிறார்.

அங்கிருந்து, இந்தியாவிற்கு 400 மைல் தூரத்திலுள்ள சாமர்க்கண்டிற்குச் சென்று பார்வையிட்டு விட்டு உடனே டாஸ்கண்ட் திரும்பினாராம். வழக்கம்போல், வரவேற்புகள் அங்கெல்லாம் அவருக்குத் தரப்பட்டுள்ளன.

இலங்கை திராவிடர் என்ன செய்யப் போகின்றனர்?

'முறிவு' தொடர் கதையாகிறது—முடிவு தெரிகிறது!

இலங்கை இந்தியர் குடியுரிமைப் பிரச்சினை பற்றி இலங்கையிலுள்ள இந்திய உயர்தர அதிகாரியான சக்கரவர்த்திக்கும்—இலங்கைப் பிரதமர் சர். ஜான் கொத்தலாவலைக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்று எவ்வித உடன்பாடோ, முடிவோ இல்லாமல் முறிந்தனவாம்.

பேச்சுவார்த்தைகளின்போது, கள்ளக் குடியேற்றம், கள்ளக் குடியேற்றத்தைத் தடுக்க இலங்கைக் குடிகளல்லாதாரின் பட்டியலைத் தயாரிப்பது ஆகியவை குறித்தே அவர்களிடையே முக்கியமான கருத்து வேற்றுமைகள் நிலவின என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

டில்லி ஒப்பந்தத்தின் சில பிரிவுகளை வியாக்கியானம் செய்வது சம்பந்தமாக இந்தியாவுடன் ஏற்பட்ட சில கருத்து வேற்றுமைகள் குறித்து இரு நாட்டுப் பிரதம மந்திரிகளும் கூடிப் பேச வேண்டுமென்று இலங்கை சர்க்கார் கேட்கும் என்றும் தெரிகிறது.

இலங்கை, இந்தியப் பிரதமர்கள் இருவரும், கடந்த அக்டோபர் திங்களில் டில்லியில் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பின்னர், இந்தியா—இலங்கைப் பேச்சுவார்த்தைகள் பயனற்றுப் போவது இது இரண்டாவது தடவையாகும்.

இந்தக் கஷ்டங்கள் எல்லாம் ஏற்படுவதற்கான காரணமெல்லாம் கள்ளத்தனமாகக் குடியேறியதாக யார் மீது குற்றம் சாட்டப்படுகிறதோ அவர்கள், தாங்கள் நிரபராதிகள் என்று நிரூபிக்கின்ற பொறுப்பை அவர்களிடத்திலேயே ஒப்புவித்து இலங்கை சர்க்கார் அண்மையில் தனது குடியுரிமைச் சட்டங்களில் செய்த திருத்தமே யாகும் என்று கூறப்படுகிறது.

'சிறிய' விஷயமாம்!

"இலங்கைக் குடியுரிமை மனுக்கள் 'அற்ப' காரணங்களுக்காக நிராகரிக்கப்படுவதாகக் கூறப்படும் புகார்கள் மிகச் 'சிறிய' விஷயங்களாகும். ஒப்பந்த அமுலில் முன்னேற்றம் காணுமுன் மற்றப் பிரச்சினைகளில் இருநாடுகளிடையேயும் உடன்பாடு தேவை; அற்ப காரணங்களுக்காகக் குடியுரிமை மனுக்கள் பெருவாரியாக நிராகரிக்கப்படுவது குறித்து இந்திய உயர்தர அதிகாரி மிகப் பெரிய பிரச்சினையாகக் கருதிக் கொள்வதாகத் தெரிகிறது,"

என்று, இலங்கை—இந்தியா விவகாரங்களில் இலங்கை சர்க்காரின் ஆலோசனைக் குழுச் செயலாளரான டி. பி. எல்லப் போலவு என்பவர் குறிப்பிட்டிருக்கிறார்.

நிலச் சீர்திருத்தத்தின் நிச்சயமற்ற தன்மை!

ஆகஸ்டு மாத கூட்டத்தில் சட்டமாகாது!

அடிப்படை ஏற்பாட்டில் அமைச்சர்களிடை கருத்து வேற்றுமை!

எண்ணம் ஈடேற உழவர்கள் வீறுகொள்ள வேண்டும்

(நமது விசேட நிருபர்)

"நில சீர்திருத்தம், இதோ வரப்போகிறது; இந்த சட்ட சபைக் கூட்டத்திலேயே சட்டமாகிவிடும்," என்று நம்பிக்கைத் தரப்பட்டது ஏற்கனவே காங்கிரஸ் தலைவர்களாலும், அமைச்சர்களாலும்!

இப்பொழுது திட்டவட்டமாகத் தெரிந்துவிட்டது,—'நில சீர்திருத்தம் இப்பொழுது கிடையாது—அதற்குரிய மசோதா சட்டமாக்கப்படுவதும் அடுத்த சட்ட சபைக் கூட்டத்தில் இல்லை,' என்பது!

மேலும், உழவர்கள், முழு மூச்சுடன் நில சீர்திருத்தம் கோரி கிளர்ச்சி செய்தால் அல்லாது, சென்னை காங்கிரஸ் அரசாங்கம் அசைந்து கொடுக்காது என்றே எண்ணவேண்டியதாகிறது.

ஆகஸ்டு 15-ந் தேதிக்குள் நில சீர்திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படும் என அமைச்சர் குழு கொடுத்திருந்த வாக்குறுதியின் பலனாக, நான்கு மந்திரிகளைக் கொண்ட ஒரு துணைக் குழு உருவான யோசனையைக் கூற நியமிக்கப்பட்டது.

அந்தத் துணைக் குழுவும் தனது யோசனையை உருவாக்கித் தந்துவிட்டது. அதுகுறித்து திட்டக் குழுவின் கருத்தறிந்த பின்பே இறுதியாக முடிவெடுக்கப்படும் என்று இப்பொழுது அரசாங்கச் சார்பில் கூறப்படுகிறது.

'திட்டக் குழுவின் கருத்தறிந்த பின்னரே சட்டம் கொண்டு வரப்படும்' என, இதற்கு முன் எப்பொழுதும் அரசாங்கம் குறிப்பிட்டது கிடையாது.

முன்னர் கூறாத ஒன்றை இப்பொழுது மேற்கொண்டிருப்பதினால், நில சீர்திருத்தம் சிபாரிசுகளில் அமைச்சர்களுக்குள்ளாகவே ஒருமைப்பாடு இல்லையோ எனவும், பலத்த கருத்துமாறுபாடு நிலவுகிறதோ எனவும் யூகிக்க இடமிருக்கிறது; இத்தகைய கருத்து பரவலாக இருக்கவும் இருக்கிறது.

நான்கு மந்திரிகள் துணைக்குழுவில் முக்கிய பங்கு பெற்றிருந்த நிதி அமைச்சர் சுப்பிரமணியம், திட்டக் குழுவிற்கு அனுப்பியுள்ள சிபாரிசுகளின் சாராம்சத்தை சூசகமாகக் குறிப்பிடக் கூட மனங்கொள்ளவில்லை; பன்னிப் பன்னி விஷயத்தின் விளக்கம் கேட்டால், 'துணைக்குழுவின் சிபாரிசு அடிப்படையில் நில சீர்திருத்தத்தைக் கொண்டதாக இருக்கிறது,' என்று சாமர்த்தியம் பேசுகிறார்!

மற்றொரு உறுப்பினரும், நிலவரி அமைச்சருமான மாணிக்கவேலரோ, 'அமைச்சர் குழு இரகசியத்தை வெளியிடமாட்டேன்' என அறநெறி பேசுகிறார்!

எது கேட்கப்பட்டாலும், 'ஆகட்டும்-பார்க்கலாம்' எனத் தாராளமாகக் கூறும் இயல்பு கொண்ட முதல் மந்திரி காமராசரோ, வாய்மூடிக் கிடக்கிறார்!

இதனால் நில சீர்திருத்தம் ஏட்டளவில், அமைச்சர் குழுவின் வாயளவில் இருந்துவருகிறது!

****

திருச்சியில்

தி. மு. க. மாநில மாநாட்டு

நிதியளிப்பு விழா

★

பொதுச்செயலாளர் வரவேற்பு

பொதுக்கூட்டம்

19—6—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: ஏ. பி. தர்மலிங்கம்

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்
சி. என். அண்ணாதுரை
கே. ஏ. மதியழகன்
அரங்கண்ணல்
தில்லை-வில்லாளன்

—திருச்சி மாவட்ட தி.மு.க.

****

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 16—6—'55 வியுழன்

அகல வாய்திறக்கின்றன!

நெல் விலைச் சரிவின் காரணமாக விவசாயிகள் வருந்துகின்றனர் — வேதனைப்படுகின்றனர். நெருக்கடியிலிருந்து மீளும் மார்க்கம், தங்களுடைய தனி முயற்சிக்குக் கட்டுப்பட்டதாக இல்லாததால் கவலையுறுகின்றனர்—கண்ணீர் சொரிகின்றனர்.

விவசாயிகளிடம் நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ள மாநில அரசாங்க அமைச்சர்களோ, நெல் வீழ்ச்சியின் தாக்குதலிலிருந்து விவசாயிகளைக் காப்பாற்ற அதிகப்படியான விளைவை அரசாங்கப் பொறுப்பில் கொள்முதல் செய்யும் உரிமை—அதிகாரம் தங்களிடம் இல்லை என்பதை வெளியில் கூறிக்கொள்ள வெட்கப்பட்டுக்கொண்டு, 'உதவி தர வேண்டிய அளவுக்கு நெல்விலை விழ்ந்துவிடவில்லை — நிகழ்ச்சி மிக மிகச் சாதாரணமானது—நாளாக நாளாக நிலைமை தனக்குத்தானே நேராகிவிடும்,' என ஆறுதல் கூறிவருகின்றனர்—கூறிக்கொள்ளுகின்றனர்.

விலை வீழ்ச்சியைக் கட்டுப்படுத்தும் உரிமை கொண்ட இந்தியப் பேரரசோ, 'அஞ்சற்க! அடுத்த அறுவடையினால் ஏற்படும் சூழ்நிலையைச் சீர்தூக்கிப் பார்த்து, மிகுதி நெல்லைக் கொள்முதல் செய்து, குறிப்பிட்ட நிலையில் நெல் விலையை நிறுத்துவது அவசியமா இல்லையா என்பதை முடிவு கட்டுவோம்,' என்று நெல் உற்பத்தியாளரிடையே மூண்டு எழுந்துள்ள மனக் கொதிப்பைத் தணிக்க முயன்று இருக்கிறது.

தொழில் துறைகளில் ஈடுபட்டிருப்போர், தம் வருவாய்க்கும், சாதாரண வாழ்க்கை வசதிகளைப் பெறுவதற்கும் இணைப்பு ஏற்படுத்தும் முயற்சியில் முழுத் தோல்வி கண்டு துக்கிக்கின்றனர்—துன்பப்படுகுழியிலிருந்துழல்கின்றனர். கரையேற வழியில்லை—விடுபடவகை விளக்கமாகவில்லை.

வேலையற்றோர் அணி நீளுகிறது—நீண்டுக்கொண்டே போகிறது.

ஏட்டுத் திட்டங்களுக்கோ பஞ்சமில்லை. செயலாற்றப் பெற்ற ஒன்று இரண்டு திட்டங்களில் கிடைத்துள்ளதாகக் கூறப்படும் பாராட்டுரைகளுக்கோ பஞ்சமில்லை; ஆனால் வேலையின்மைக்குத்தான் தக்கதோர் பரிகாரத்திற்கு வழி காணப்பட்டதாகத் தெரியவில்லை.

எங்கு நோக்கினும் அழுகுரல்! இதயக் குமுறல்! பொதுமக்கள் நிலை இது! ஆனால், ஆளவந்தார்களோ, அகமும் முகமும் மகிழ, ஊர் சுற்றி உபதேசம் புரிந்தவண்ணம் காலத்தைக் கழித்து வருகின்றனர்!

மனங்கொள்ளாத மக்கள்! அவர்களுக்குத் தகுதி வாய்ந்த தலைமை, ஆளவந்தார் உருவில் உருத்திரத் தாண்டவம் புரிகிறது!

நாட்டு மக்களின் நிலையும், ஆளவந்தார்களின் போக்கும் இவ்வாறு இருக்கும் நிலையில், ஆலயங்கள் அழக் கிளம்பியுள்ளன— இல்லை—அவைகள் அவதிப்படுவதாக, அவைகளின் வளத்திலும், வாட்டத்திலும் தங்கள் வயிற்றை ஒட்ட வைத்துக்கொண்டிருக்கிற 'அர்ச்சகத் திருமேனிகள்' முகாரி வைக்கின்றன!

ஐம்பதாயிரம் ஆலயங்கள் உள்ளனவாம், தமிழ்நாட்டில்—ஆம்—சென்னை மாநில எல்லைக்குள்; அவைகள் சட்ட சபையில் இடம் பெற்றிருக்கவில்லையாம்! அத்தகுதி வேண்டுமாம் அவைகளுக்கு!

சட்ட சபை பதவியை மூலமூர்த்திகளும் கோரவில்லை—உற்சவமூர்த்திகளும் வேண்டவில்லை; ஆனால், அந்தப் படமாடும் கோயில்களில் நடமாடும் தெய்வங்களாக உள்ள அர்ச்சகமூர்த்திகள் அங்கலாய்க்கின்றன — இல்லை—இன்றியமையாத் தேவையைத் தெரிவிக்கின்றன!

ஆசிரியர், பட்டதாரிகள், நகராட்சி மன்றங்கள் ஆகியவைகளுக்கென மேல் சபையில் இடம்பெறும் உரிமை தந்திருப்பதுபோல், ஆலயங்களுக்கும் அங்கம் வகிக்கும் உரிமை அளிக்கப்பட வேண்டுமென, பார்வதி — பரமசிவனுக்குக் கடைக்கண்ணால் உணர்த்த, பரமசிவன், நந்தி எம்பெருமானுக்குத் திப்பொறி பறக்கக் கட்டளை பிறப்பிக்க, நந்தி பிரதம அர்ச்சகருக்கு உத்திரவு போட, அர்ச்சகர்கள் சென்னையில் கூடி, அரசாங்கத்திற்கு 'ஸ்ரீமுகம்' அனுப்பி உள்ளனர்!

'இடைக்கால ஏற்பாடு கிய மனம் கொடு,' என்பது!—நிரந்தர ஏற்பாடாக, அரசியல் சட்டத்தையே திருத்தியாக வேண்டிய கட்டாயத்தை, அர்ச்சகர் சங்கம் இந்தியப் பேரரசுக்குக் கொடுத்து இருக்கிறது!

ஆலயத் தொகுதி என ஏற்படுத்தி, அதில் அர்ச்சகர்களாக உள்ளவர்களுக்கு மட்டுமே வாக்களிக்கும் உரிமை கொடுத்து, அர்ச்சகராக உள்ள ஒருவரையே சட்ட சபை பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கும் உரிமை அளிக்கப்பட வேண்டுமென, அர்ச்சகர் சங்கம் கோருகிறது! அவர்களுடைய மக்களாட்சிப் பற்றுதலை என்னென்பது? எதற்கு ஒப்பிடுவது?

இடிந்த ஆலயங்களைப் புதுப்பிக்க, மக்களின் வரிப்பணத்தைச் செலவிட அரசியல் சட்டத்தில் இடமில்லையானாலும், அதற்கும் ஏற்பாடு செய்யப்படும் — சட்ட சபைக்குள் நுழையும் வாய்ப்பை அர்ச்சகர்கள் பெறுவார்களானால்!

'அர்ச்சகர் பிரதிநிதி' என்ற பெயரில்தான் சட்டசபையில் எவரும் உட்கார்ந்திருக்கவில்லையே அல்லாது, அர்ச்சகர் சார்பிலே பேசும 'ஆஷாடபூதிகள்' சட்டசபையில் இல்லாமலா இருக்கிறார்கள்? ஆச்சாரியார், அன்று சட்டசபையிலும், இன்று வெளியிலும் தினம் தினம் அதைத்தானே செய்துவந்தார்—செய்தும் வருகிறார்!

அர்ச்சகர்களின் அபிலாஷையை ஆதரித்து 'இந்து' இதழ் இனி தலையங்கம் எழுதும்! ஆசிரியர் கடிதப் பகுதியில், அலை அலையாக, அர்ச்சகர்களின் அழுகுரல் அச்சடிக்கப்படும்!

அர்ச்சகருக்கெல்லாம் பிரதம அர்ச்சகராக இருந்து வரும் ஆச்சாரியார், அரசியல் தத்துவத்திற்குப் புதிய பாஷ்யம் கூட்டக் கிளம்புவார்! அவர் புகதுரையை விமர்சனம் செய்ய புற்றீசல் போல், பல நாட்டு அரசியல் அமைப்புகளிலிருந்து ஆதாரங்கள் எடுத்துக் காட்ட வழக்கறிஞர்கள் கிளம்பிவிடுவர்!

புதை பொருள் ஆராய்ச்சியாளர்களும், 'முருகன் தோட்டத்தில் தோண்டியெடுத்த செப்பேட்டில், முற்கால சோழன் ஆட்சியில், ஆரிய அர்ச்சகர்களுக்கென, சிறப்பான இடம கொடுக்கப்பட்டிருந்த உண்மை வரையப்பட்டிருக்கிறது,' எனக் காட்டிடுவர்!

'பாண்டியன் அறங்கூறும் அவையின் தலைவரே மதுரை மீனாட்சி கோயில் பிரதம அர்ச்சகர்தான் என்று, அழகர் மலையில் ஈசானிய மூலையில் விளக்கமாக செதுக்கப்பட்டிருக்கிறது' எனவும், அகச்சான்று—புறச்சான்றுடன் சலசலப்பு கிளம்பும்!

அகோபில மடத்தார் ஆக்ஞாபிப்பர்! காமகோடி பீடாதிபதி கர்ஜிப்பார்! குன்றக்குடியார் கத்துவார்!

சீடகோடிகள், ஆஸ்திக சிங்கங்கள் அனைத்தும கொக்கரிக்கும்!

இவ்வாறு நடைபெறும் நான்கைந்து பேர் கூட்ட 'மாபெரும் நிகழ்ச்சி'யை, 'இந்து' பத்தி பத்தியாகப் பகட்டாக வெளியிடும்! 'சு. மி.', 'தி. ம.,' இதழ்கள் பக்கம் பக்கமாக, பயங்கரத் தலைப்புகள் தந்து, செய்திகளைப் பிரசுரிக்கும்!

வளர்ந்து வரும் அறிவுத் துறையை விழுங்க, மீண்டும் அறியாமை இருளை அவனியில் திணிக்க, இந்த ஆலயத் திமிங்கிலங்கள் அகல வாய் திறக்கின்றன! அரசியலில் ஆதிக்கம் வேண்டுமாம் ஆதிக்கம்!

வெண்ணெய் உண்டு-எனினும்!

"பழுப்பு நிலக்கரியிலிருந்து மின்சாரப்பெருக்கம், செயற்கை உர உற்பத்தி, எரிபொருள் உள்ளிட்ட பல தொழில்களை நிர்மாணிக்க முடியும்.

"சேர்வராயமலையில் கிடைக்கும் 'பாக்சைட்'டைக்கொண்டு அலுமினியத் தொழிற்சாலையை நிறுவ முடியும்.

"மின்சாரக் கருவிகள், காகிதம் ஆகிய இரண்டுக்கும் தொழில்நிலையங்கள் ஏற்படுத்த முடியும்;

"கைத்தறிகளையும், நூற்பு ஆலைகளையும் விரிவாக்க முடியும்;

"சர்க்கரை, சிமெண்ட் ஆகிய பொருட்கள் பெருகத்திற்கு மேலும் தொழிற்சாலைகளைக் காண முடியும்;

"கண்ணாடி, தோல், உலோகப் பொருட்கள், இன்னோரன்ன பொருட்களை உற்பத்தி செய்ய ஏராளமான வசதி இருக்கிறது;

"இத்தனை தொழில்களையும் நிறுவுவதற்குத் தேவையான தொழில் நுணுக்க கல்விபெற்றோர், நிபுணர்கள், ஆர்வம், கடின உழைப்பு முதலியன தேவை;

"அத்தனையும் சென்னையில் கிடைக்கின்றன; ஆனால், அவற்றைத் துவக்குவதற்குத் தேவையான முதலீடுதான் நம்மிடம் இல்லை."

இப்படிப் பேசியிருக்கிறார்—சென்னை மாநில தொழில்துறை இலாகா அதிகாரியான டி. எம். எஸ். மணி அவர்கள்.

தொழில் துவங்க இன்றியமையாத தேவைகளான அத்தனையுமிருந்தும், 'மூலதனம இல்லை; அதனால்தான் தொழில் துவங்க முடியவில்லை,' என்று அங்கலாய்த்திருக்கிறார்.

'வெண்ணெய் இருக்கிறது; அதை உருக்கி நெய்யாக்க நெருப்பில்லை,' என்கிறார் போலும்!

வெண்ணெய் இருக்கிறது—நெய்யாக்க நெருப்பும் கிடைக்கிறதாகவே நாம் கொள்வோம்; ஆனாலும், உருக்கிவிட முடியுமா? 'செய்' என்று சொன்னால்தானே செய்ய முடியும்? அதைச் சொல்கிற அதிகாரம், சென்னை சர்க்காரிடமிருக்கிறதா?"

தென்னாட்டில் கிடைக்கும் வசதிகளைக் காட்டிலும் குறைவான வசதிகள் கொண்ட வடநாட்டுப் பிரதேசங்களில் பெரும் தொழில்கள் துவக்கப்பட்டிருக்கின்றனவே! 'அவற்றிற்கெல்லாம் மூலதனம் எங்கிருந்து கிடைத்தது' என்பதை, சென்னை அரசாங்க தொழில் துறை அதிகாரி அறியாமலிருந்திருக்க முடியாது.

வடநாட்டில், வசதிகள் குறைவாயிருந்தும், கோடிக் கணக்கான ரூபாய் செலவில் தொழிற் திட்டங்கள் இடம பெற்றிருக்கின்றன! 'தென்னாட்டில், வசதிகளிருந்தும் மூலதனம் கிடைக்கவில்லை,' என முகாரி பாடுகிறார், அதிகாரி - ஏன்?

மூலதனம் கிடைப்பதாகவே வைத்துக் கொண்டாலும், சேலம் சேர்வராயன் மலையைத் தோண்டி, சென்னை அரசாங்கத்தால் இரும்பை எடுத்துவிட முடியாது; அதற்கான உத்திரவு வடக்கிலிருந்து வந்தாக வேண்டும்.

உத்தரவு தரவேண்டிய அவர்களின் எஜமானர்களோ—'சேலமா? இரும்பா? தொழிற்சாலையா? துவங்கவா? எப்படி? நிலக்கரி எங்கே?'—என்று ஏளனம் பேசுகின்றனர்.

'நெய்வேலியா? நிலக்கரியா? பரீட்சித்துப் பார்க்கிறோம்; வெற்றி கிடைத்தால் வேலை தொடரலாம்; பொறுத்திருங்கள், பார்க்கலாம்'—இப்படியெல்லாம், பதில் கூறுகின்றனர்!

அப்படியே துவங்கினாலும், 'தொழிலின் பலனில் உனக்கு கால் பங்கு; எனக்கு முக்கால் பங்கு—சம்மதமா?' என்று பேராசை கொண்டு பேரம் பேசுகின்றனர்!

இந்த நிலையில், 'வெண்ணெய் உண்டு; நெய்யாக்க நெருப்பு இல்லை,' என்று மட்டும் அதிகாரி கூறியிருப்பது, அரை குறையானது.

முழு அளவில் கூற வேண்டுமானால், "இங்கு வெண்ணெய் இருக்கிறது; அதனை, 'பதம்' தெரிந்து உருக்கி, நெய்யாக்கும் பக்குவம் தெரிந்தவர் இருக்கின்றனர்; ஆனால், நெருப்பில்லை, உருக்க; நெருப்பு, வடக்கத்தியாரிடம் சிக்கிவிட்டது; அவர்களோ, அந்த நெருப்பை, தாங்கள் விரும்பினால், தாங்கள் இஷ்டப்பட்ட அளவு மட்டுமே தருவார்கள்; 'தரவே மாட்டேன்' என்றும் கூறுகின்றனர்; அப்படியே நெருப்பு தந்து உருக்கி நெய்யாக்கினாலும், 'முக்கால் பங்கு எனக்கு - கால் பங்கு உனக்கு' என்கின்றனர்," என்று குறிப்பிட வேண்டும்.

என்ன செய்வது? வெண்ணெய் இருக்கும் தாழியே தங்களுடையது என்றல்லவா அவர்கள் உரிமை கொண்டாடுகின்றனர்; அதன் விளைவுதானே தென்னாட்டவருக்கு நெய் கிடைக்காமலிருப்பது!

மூன்றே மாதங்களில் 30 லட்சம் பேரா?

டில்லி நகரில் சினிமா செல்வோர் பெருக்கம்

சினிமா எதிரிகளுக்கு அர்ப்பணம்

"தலைநகர் வாசிகளின் திரைப் படப் பழக்கத்தைப் பற்றி சில ருசிகரமான விஷயங்கள் வெளிவந்திருக்கின்றன.

"இந்தியாவில் அதிகப்படியான—அதாவது, சதுர மைலுக்குக் கணக்கெடுத்தால்—திரைப்படக் கொட்டகைகள் தலைநகரில்தான் இருக்கின்றன. ஒரு சதுர மைலுக்கு இரண்டு திரைப்படக் கொட்டகைகள் வீதம் இங்கு இருக்கின்றன. இங்கு மொத்தம் 29 நிரந்தரக் கொட்டகைகளும், 6 தற்காலிக 'டென்ட்' கொட்டகைகளும் உள்ளன. அகதிகள் வசிக்கும் பாகங்களில் இன்னும் அதிகப்படியாக தற்காலிகத் திரைப்படக் கொட்டகைகள் போட வசதிகள் கிடைக்குமென்றும் தெரிகிறது. ஆனால் கடந்த மூன்றாண்டுகளாக திரைப் படத்திற்குச் செல்லும் டெல்லி பொது மக்களின் எண்ணிக்கை ஒரே நிலையில் இல்லை 1952-ம் ஆண்டில் 81,39,664 பேர் நிரந்தர திரைப் படக் கொட்டகைகளுக்குப் போயிருக்கிறார்கள்; 1953-ல் - 60,52,815 பேர்களும், 1954-ல் 97,86,248 பேரும், 1955-ம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் மட்டும் சுமார் 30 லட்சம் பேர்களும் திரைப் படம் பார்த்திருக்கிறார்கள். 1953-ம் ஆண்டில் சினிமா பார்ப்போரின் எண்ணிக்கை குறைந்ததற்கான காரணம் தெரியவில்லை.

"சராசரி 27,935 பேர் தினமும் திரைப்படம் பார்க்கிறார்கள். திரைப்படக் கொட்டகைகளின் வருட வருமானம் சராசரி ரூ. 1 கோடி என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

"ஆனால் திரைப்படம் பார்ப்பதில் யார் அதிகம் செலவழிக்கிறார்கள் என்றால், தலைநகர் வாசியைவிட கல்கத்தாவாசிதான் முதலிடம் பெறுகிறான். கல்கத்தாவில் ஒவ்வொருவரும் வருடத்திற்கு சராசரி ரூ 9—8—9 செலவழிப்பதாகவும், தலைநகரில் ஒவ்வொருவரும் சராசரி ரூ 5—12—0 மாத்திரம்தான் செலவழிப்பதாகவும் கணக்கிடப்பட்டிருக்கிறது."

—'தமிழ நாடு' : 13—6—55

1,500 ரக நெல்கள்!

கோயம்புத்தூர் விவசாய ஆராய்ச்சி நிறுவனம் 1,500 ரக நெல்களை சேகரித்துள்ளதாம்!

சென்னை மாநிலத்தில் 6,50,000 ஏகர் நிலத்தில், அபிவிருத்தி செய்யப்பட்ட நெல் வகைகள் சாகுபடி செய்யப்படுகின்றனவாம்.

தி. கொ. போலீஸ் பெற்ற முதல் தோல்வி

வழக்கில் சம்மந்தப்பட்ட மாணவர் விடுவிக்கப்பட்டனர்

தமிழர் உரிமை கிளர்ச்சி வழக்கில் தீர்ப்பு

தக்கலை, ஜூன் 11—

சென்ற ஆண்டு ஜூலை, ஆகஸ்டு திங்களில் நடைபெற்ற திரு-தமிழக விடுதலை போராட்டம் சம்பந்தமாக போலீசாரால் தொடரப்பட்ட வழக்குகளில் இன்று ஒரு வழக்கில், எதிரிகள் நிரபராதிகளென்றும், சர்க்கார் தரப்பில் குற்றங்கள் நிரூபிக்கப்படவில்லையென்றும் கூறி மாஜிஸ்திரேட் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்.

இந்த வழக்குகளில் முதன் முதலாகத் தீர்ப்பு கூறப்பட்டிருக்கும் வழக்கு இதுவேயாகும்.

சென்ற ஆண்டு ஜூலை திங்கள் 28ந்தேதி தக்கலை வழி சென்ற மாநில போக்குவரத்து இலாகாவைச் சேர்ந்த இரட்டை மாடி பஸ் மீது கல்லெறிந்ததாக தக்கலை உயர்தரப்பள்ளி மாணவர்களான தோழர்கள் எம். ஏசுநேசன், ஜி. முத்துசாமி, வி. தங்கப்பன், என். இராஜய்யன், எஸ் ஞானப்பிரகாசம், பி. முத்தையன், எஸ். தர்மராஜ் ஆகிய 7 பேர்கள் மீதும் தக்கலை போலீசாரால், பத்மனுபபுரம்முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் கோர்ட்டில் வழக்கு பதிவு செய்து விசாரணை நடைபெற்று வந்தது.

மேற்படி வழக்கு விசாரணை முடிவடைந்து, அதன் மீது மாஜிஸ்திரேட் தீர்ப்பு கூறுகையிலேயே, எதிரிகள் மீதுள்ள குற்றங்கள் சர்க்கார் தரப்பில் நிரூபிக்கப்படவில்லையென்றும், எனவே, அவர்களை நிரபராதிகளென தாம் கருதி விடுதலை செய்திருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

தி த. நா. க. வழக்குகளிலுள்ள எதிரிகள் அனைவரும் ஏற்கனவே ஜாமீனில் விடுதலை பெற்றிருப்பது தெரிந்ததே.

தென்னுப்பிரிக்க நிறவெறி

இந்தியப் பேராசிரியர் கண்டனம்

ஏதன்ஸ், ஜூன் 14—

குடும்பச் சட்டங்கள் சம்பந்தப்பட்டவரை வெள்ளையரல்லாத தனி குடிமக்களை அவமானப்படுத்துவதில், சர்வாதிகார நாடுகளையும் தென்னுப்பிரிக்கா மிஞ்சிவிட்டது; அறவே ஒழிந்துவிட்ட இட்லரின் 'ஆளப்பிறந்த சாதி' என்ற ஹெரான்வோக் கொள்கை, தென்னுப்பிரிக்க நிறவெறியர்களின் கண்களைத் திறக்க வேண்டும்; தெ. ஆ. நிறவெறிக் கொள்கைக்கு, இட்லரின் கொள்கைக்கு நேர்ந்த கதிதான் ஏற்படும்,"

என்று அகில உலக சட்ட நிபுணர்கள் காங்கிரசின் சிவில் சட்டக் குழுவின் உறுப்பினரான பம்பாயைச் சேர்ந்த பேராசிரியர் என். பி. வக்கீல் குறிப்பிட்டிருக்கிறார்.

கென்யாவில் இந்தியர் கொலை

நைரோபி, ஜூன் 14—

இங்கு நேற்று இரவு அமர்சிங் என்ற ஒரு இந்தியர் வெட்டிக் கொல்லப்பட்டதாகவும், அதைத் தொடர்ந்து 5 ஆப்பிரிக்கர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் போலீசார் தெரிவித்துள்ளனராம்.

38 வயதான அமர்சிங், நண்பர் ஒருவர் வீட்டுக்குப் போய்விட்டுத் திரும்புகையில் வெட்டிக் கொல்லப்பட்டாராம்.

இந்தியாவுக்கு 2,050 இரயில் டிரக்குகள்

செக்கோஸ்லவேக்கியா, இந்தியாவிற்கு 2,050 இரயில் டிரக்குகளை, இங்கு கையொப்பமாகியுள்ள ஒப்பந்தப்படி அனுப்பித் தரும் என்று பிரேக் வானொலி அறிவித்துள்ளதாம்.

ஒரே வாழைக் குலையில் பதினுன்கு 'பூக்கள்!'

மேக்காமண்டபம், ஜூன் 15—

தக்கலைக்கு அருகிலுள்ள மணக்காவிளை எனுமிடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் என்பவர், வேளிமலை தோட்டத்திலிருந்து ஒரு அதிசயக் கல்வாழைக் குலை கொண்டு வந்திருக்கிறார். அந்த வாழைக் குலையில் 14 பூக்கள் (கூம்புகள்) காணப்படுகின்றனவாம்!

கல் வாழை இனத்தைச் சேர்ந்த இந்த அதிசயக் குலையை ஏராளமான மக்கள் வந்து பார்த்துச் செல்கின்றனர் என்று கூறப்படுகிறது.

அகாலிதள உரிமைக் கிளர்ச்சி குறுகிய மனப்பாங்கானதாம்!

பண்டித பந்த் சட்டம் பேசுகிறார்

பஞ்சாபில் அகாலிதளத்தவர் நடத்தும் உரிமைக் கிளர்ச்சியை 'குறுகிய மனப்பான்மையின் ஆர்ப்பாட்டம்' என இந்தியப் பேரரசின் உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் வர்ணித்திருக்கிறார்.

'இதர அமைதியான வழிகளைப் புறக்கணித்துவிட்டு, சட்டத்தை திட்டமிட்டு மீறுவது, நாட்டின் அமைதியைக் குலைப்பதாகும், இழப்பமூட்டுவதாகும்; இதனை எந்த ஒரு சர்க்காரும் பொறுத்துக் கொள்ள முடியாது' என்று பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் அவர் குறிப்பிட்டிருக்கிறார்

'மாநில புனரமைப்புக் குழுவிடம் தங்கள் கருத்தைத் தெரிவித்துவிட்டு, அகாலி தளத்தவர், முடிவுக்காகக் காத்திருக்க வேண்டும்; ஆனல் அந்த நேரான பாதையை விட்டு விட்டு சட்டத்தை மீறும் தவருன பாதையில் செல்கின்றனர்' என்றும் பந்த் கூறினாராம்.

வேறு அமைதியான வழிகளிருக்கும்போது, ஒருவர் தன் லட்சியத்தை ஈடேற்றிக் கொள்ள சட்டத்தை அவமதித்து, அதனை மீறுவது, நாட்டின் முன்னேற்றத்தைத் தடுப்பதைத் தவிர வேறல்ல என்றும் அவர் கூறினாராம்.

மாஸ்டர் தாராசிங், சர்தார் இக்பால் சிங் ஆகியோர் சிறைபிடிக்கப்பட்டுவிட்டதால், பூபேந்திர சிங் மான் அகாலிதளத் தலைவராகவும் இருப்பார் எனத் தெரிகிறது.

மாஸ்டர் தாராசிங், மற்றும் பல அகாலிதளத்தவர் மீது 188 இ. பி. கோ. பிரிவுப்படியும், தடையுத்தரவை மீறியதாகவும் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. வழக்கு 27–ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

★

35-வது நாளன்று 105 பேர் கைது

அமிர்தசரஸ், ஜூன் 13—

அகாலி தளத்தவர் தடையுத்தரவை எதிர்த்து நடத்தும் உரிமைக் கிளர்ச்சியின் 35-வது நாளான இன்று 105 தொண்டர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

பெப்சு மாநில முன்னுள் நிதி மந்திரியான சர்தார் பூபேந்தர் சிங் மான் என்பார், கிளர்ச்சியின் அடுத்த 'சர்வாதிகாரி'யாக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று அகாலிதள பொதுச் செயலாளர் அறிவித்திருக்கிறார்.

இலங்கையில் வர்ண மழை!

இலங்கை கண்டியருகில், அண்மையில், 'தங்க' மழை பெய்ததாம். காற்றில் மிதந்துகொண்டிருந்த மலர்களின் மரகதத் தூளே இதற்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

மூன்று வாரங்களுக்கு முன் மஞ்சள் நிற மழை பெய்தது என்றும், இதில் நனைந்தவர்களின் உடைகள் எல்லாம் மஞ்சள் நிறமாகிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

இத்தகைய மழை அசாதாரணமானதல்லவென்றும், சென்ற சில தினங்களில் வேறு நிற மழை பெய்திருப்பதாகவும் அதிகாரிகள் கூறியிருக்கின்றனர். காற்றில் மிதக்கும் நுண்ணிய பொருள்களே மழைத் துளிகளுக்கு வர்ண ஜாலங்களைத் தருவதாக அவர்கள் விளக்கினர் எனத் தெரிகிறது.

ஆந்திராவின் கடன் பொறுப்பு

ரூ. 30 கோடி என மதிப்பீடு

சென்னை மாநிலத்தின் மொத்தக் கடன் பொறுப்புகளில் ஆந்திர மாநிலத்தின் பங்கு ரூ. 30 கோடி என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

சென்னை மாநிலம் ஒன்ருக இருந்தபோது அதன் மொத்தக் கடன் பொறுப்பு ரூ. 96 கோடியாகும். அதில் ஆந்திராவின் பங்கு 30 கோடிக்கு மேலிருக்கும் என்றும், வட்டி ஒரு கோடிக்கு அதிகமிருக்கலாமெனவும் கூறப்படுகிறது.

நகர் பஸ் போக்குவரத்து

சென்னை, ஜூன் 14—

அடுத்த மாதம் கல்லூரிகள், நீதி மன்றங்கள் எல்லாம் கோடைக்குப் பிறகு திறக்கப்பட்டு விட்டால், நகரில் போக்குவரத்து மிக நெருக்கடிக்குள்ளாகும் என்பதை எதிர்பார்த்து அந்த இலாகா அதிகாரிகள் அதைச் சமாளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனராம்.

தற்போது மொத்தம் 400 பஸ்கள் நகரில் ஓடுகின்றன; தினந்தோறும் 3 லட்சம் பிரயாணிகள் அவற்றைப் பயன்படுத்துகின்றனர்; ஆனல், நகரின் தேவைகளைச் சமாளிக்க அதிகமான பஸ்கள் வேண்டும் என்பதையும் அவர்கள் உணர்ந்திருக்கின்றனராம்.

பெயர் சூட்டல்

சென்னை தியாகராயநகர், தர்மாபுரம் தோழர் கே. மார்க்கசகாயம் அவர்களது பெண் மகவுக்கு 12—6—55 அன்று தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் அவர்களால் 'கமலா' எனப் பெயரிடப்பட்டது; அதன் நினைவாக தி. மு. கழக இரண்டாவது மாநில மாநாட்டு நிதிக்கென ரூ. 1 தரப்பட்டது—நன்றி—பொறுப்பாளர்.

ஃ ஃ ஃ

குலசேகரம்புதூர் தோழர் எஸ் அல்பான்ஸ் அவர்களது ஆண் மகவுக்கு 'இங்கர்சால்' எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

டி. டி. கே. ஆச்சாரியின் ஆசைக்கு இந்திய பேரரசு பணிவு

இரும்பு உற்பத்திக்கென தனி இலாகா அங்குரார்ப்பணம்

இரும்பு உருக்கு உற்பத்தி சம்மந்தமாக சர்க்கார் நடத்தும் தொழில் நிறுவனங்களுக்கும், சர்க்காரின் இரும்பு—உருக்கு வார்ப்பட நிலையங்களுக்கும் பொறுப்பேற்பதற்காக மத்திய மந்திரிசபையில் புதியதொரு இலாகா ஏற்படுத்தப்பட்டது.

ஏற்கனவே தெரிந்தபடி, வர்த்தக, தொழில் இலாகா மந்திரியாயிருக்கும் டி. டி. கிருஷ்ணமாச்சாரி இந்த இலாகாவின் மந்திரியாகவுமிருப்பார்.

சர்க்கார் துறையில், ரூர்கேலாவில் ஒன்றும், பிலாயில் ஒன்றுமாக இரண்டு இரும்பு—உருக்குத் திட்டங்கள் இருக்கின்றன.

இமாசலப் பிரதேசத்தில் நான் எனும் நகரில், சர்க்காரின் இரும்பு—உருக்கு வார்ப்பட நிலையம் இருக்கிறது.

திருமணங்கள்

28—5—55ல், கலையம்புத்தூர் தோழர் வி. பத்மநாபன்—தோழியர் சரசுவதி அம்மையார் திருமணம் நடைபெற்றது. இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ 1 நன்கொடை அளிக்கப்பட்டது.

* * *

2—6—55ல், திருவண்ணமலை தோழர் ஏ. பெரியசாமி—தோழியர் எல். சானகி அம்மையார் திருமணம் தோழர் ப. உ. சண்முகம் தலைமையில் நடைபெற்றது. இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 5 நன்கொடை தரப்பட்டது.

* * *

10—6—55 காலை 9 மணிக்கு சென்னை-சூளை, கல்யாணமேஸ்திரி தோட்டம் (திரு. வி. க. திடல் எதிரில்) தோழர் சு. சிங்காரம்—தோழியர் பாப்பாத்தி திருமணம், தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கே. எம். கண்ணபிரான், இளம்பரிதி ஆகியோர் சீர்திருத்தத் திருமணத்தின் அவசியம் குறித்து சொற்பொழிவாற்றினர். இறுதியாக பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள்மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 5 நன்கொடை தரப்பட்டது.

இத்திருமணத்திலேயே தோழர் சுப்பிரமணி அவர்களது ஆண் மகவுக்கு தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையாரால் 'மதிவாணன்' என்றும், தோழர் கிருஷ்ணராஜ் அவர்களது பெண் மகவுக்கு 'பூங்கொடி' என்று பொதுச் செயலாளர் அவர்களாலும் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக முறையே ரூ 1, ரூ. 1, ஆக ரூ. 2 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு நன்கொடை தரப்பட்டது.

* * *

12—6—55ல், சென்னை சிந்தாதிரிப்பேட்டை, பாலகிருஷ்ணப் பிள்ளை தெரு எண். 20 இல்லத்தில், தோழர் எம். நவமணி—தோழியர் வி. எம். வடுவாம்பாள் திருமணம், தோழர் அ. பொ. அரசு தலைமையில் நடைபெற்றது மணமக்களைப் பாராட்டி தோழர்கள் முகவை ஆர். எஸ். பாண்டியன், மற்றும் பல தோழர்களும் பேசினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை அளிக்கப்பட்டது.]

* * *

12—6—55 காலை 8 மணியளவில், சென்னை திருவொற்றியூருக்கடுத்த மணலி கிராமத்தில், தோழர் டி. துரை—தோழியர் கமலா, தோழர் எஸ். நடராசன் — தோழியர் உமயவள்ளி ஆகியோர் திருமணங்கள் தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. தோழியர்கள் பூங்கோதை, தேசியமணி ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

12—6—55 இரவு மாதவரத்தில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தின்போது, தோழர் ஏ. எம். சாமி—தோழியர் நாகம்மாள் திருமணம் அண்ணு அவர்களால் நடத்திவைக்கப்பட்டது. இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை அளிக்கப்பட்டது.

* * *

12—6—55 காலை 9 மணிக்கு மேச்சேரி தோழர் வை. சதாசிவம்-தோழியர் சி. மல்லிகா திருமணம், மணமகன் இல்லத்தில், தோழர் மு. ப. சிவம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் அ. பாலு, க. கு. சின்னசாமி, வரதராசன் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

* * *

12—6—55 காலை 10 மணிக்கு சென்னை, மயிலை, அரங்கநாதபுரம் தெரு எண். 8, மணமகன் இல்லத்தில் தோழர் கா. அப்பாதுரையார் தலைமையில் தோழர் என். முத்துமாணிக்கம்—தோழியர் பத்மாவதி திருமணம் நடைபெற்றது. தோழியர் அலமேலு அப்பாதுரை, தோழர் கோ. இளவரசு ஆகியோர் பேசினர். 44-வது வட்ட தி. மு. கழக தோழர்கள் அனைவரையும் வரவேற்று உபசரித்தனர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 2 நன்கொடை தரப்பட்டது.

ஃ ஃ ஃ

12—6—55 காலை 8 மணிக்கு சென்னை மாதவரம் கண்ணபிரான் கோயில் தெருவிலுள்ள இல்லத்தில் தோழர் கா. அப்பாதுரையார் தலைமையில், தோழர் ஏ. சொக்கலிங்கம்—தோழியர் ம. செல்வி திருமணம் நடைபெற்றது. தோழியர் அலமேலு அப்பாதுரை, ஏ. கே. சாமி ஆகியோர் மணமக்களைப் பாராட்டி பேசினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது.

* * *

11—6—55 காலை 8 மணிக்கு சென்னை—சேத்துப்பட்டு அடுத்த பிருந்தாவனம் 4-வது வீதி, எண். 70 இல்லத்தில், தோழர் இளம்பரிதி தலைமையில் தோழர் மு. கண்ணபிரான்—தோழியர் சி. சகுந்தலா திருமணம் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தித் தோழர் ஆர். டி. அரசு சொற்பொழிவாற்றினர். அத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 தரப்பட்டது.

[மேற்குறிப்பிட்டுள்ள நிகழ்ச்சிகளின் நினைவாக 'நம் நாடு' இதழுக்கு அன்பளிப்பாகத் தரப்பட்டுள்ள தொகைகள் அனைத்தையும் பெற்றுக்கொண்டோம்—நன்றி — பொறுப்பாளர்.]

பெயர் மாற்றம்

திருப்பூர், அவினுசி ரோட், சுப்பிரமணிய விலாஸ் பாத்திரக் கடையிலிருக்கும் தோழர் கா. வெ. குப்புசாமி தமது பெயரை கா. வெ. நாவரசன் என மாற்றிக்கொண்டுள்ளார். இதன் நினைவாக தோழர் நாவரசன் அவர்களால் மாநில மாநாட்டு நிதிக்காக ரூ. 2 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி — பொறுப்பாளர்.

'நம் நாடு' ஆற்றியுள்ள பணியும், பெற்றுள்ள வெற்றியும்

அண்ணாவின் பெருமிதம்

" 'நம் நாடு' இதழ் சிறிய அளவில் இருப்பது பற்றி நண்பர்கள் குறிப்பிட்டார்கள்; நாம், வேறு பத்திரிகைகளுடன் போட்டி போட்டுக்கொண்டு, 'அந்தப் பத்திரிகை 50,000 பிரதிகள் விற்ருல் நாங்கள் 66,000 பிரதிகள் விற்கிறோம்,' என்று எந்த பத்திரிகைக்கும் அறைகூவல் தந்துவிட்டு, பத்திரிகை துவங்கவில்லை;

"வேறு பத்திரிகைகள், மக்களை மயக்கும்வண்ணம் கதை, கேலிச் சித்திரம், வர்ண விளம்பரம் என்ற மினுக்குகளுடன் நடைபெறுகின்றன; ஆனால், நாம், நமக்கென ஒரு கொள்கையுடையவர்கள்—இலட்சியம் உடையவர்கள்—அவற்றினைப் பரப்புவதற்காக ஏடு நடத்துபவர்கள்;

"மற்ற பத்திரிகைகளுக்கு நம்மைப்பற்றி எழுத நேரமில்லை—நினைப்பில்லை—அக்கரையில்லை; காரணம், நம் கொள்கையில் அவர்களுக்கு நம்பிக்கையில்லை;

"நாட்டு மக்களிடை நம் கொள்கையைப் பரப்பும் பணியை 'நம் நாடு' சிறப்புடன்—திறம்பட நடத்தி வந்திருக்கிறது; வெற்றி பெற்றிருக்கிறது;

"செய்திகள் பலவற்றையும் திரட்டி, தொகுத்து, உருவம் அமைத்துத் தரும் பொறுப்பை 'நம் நாடு' மேற்கொண்டிருக்கிறது; கழகச் சொற்பொழிவாளர்கள் பலரும் தங்களுக்கிருக்கும் இயற்கையான திறமையுடன், 'நம் நாடு' உருவாக்கித் தரும் கருத்துக்களையும் கொண்டுதான் நாட்டு மக்களுக்கு விளக்கங்கள் தருகிருர்கள்;

"ஒரு இதழில் தரப்பட்ட கருத்துக்கள் எத்தனை பாராட்டைப் பெற்றது என்பதைக் கணக்கிடுவதைக் காட்டிலும், 'நம் நாடு' இதழில் வெளிவந்தவற்றைக் கண்டு கழகத் தோழர்களோ, மக்களோ அருவருப்படையவில்லை—கடந்த இரண்டாண்டுகளாக; எவரும் அருவருப்பு கொள்ளாத வகையில் பொறுப்புடன் 'நம் நாடு' நடந்து வந்திருக்கிறது என்பதைக் காட்டிலும், வேறு என்ன வெற்றி வேண்டும்?

"நாம் ஒருபோதும் நெறி தவறியதில்லை; முறை தவறியதில்லை; கொள்கை தவறியதில்லை; அதனால்தான், மக்களின் அருவருப்புக்கு ஆளாகாத வகையில் நடந்துகொள்ள முடிந்தது; தொடர்ந்தும் அப்படியேதான் நடந்து வருவோம்,"

—என்று அண்ணா அவர்கள், 'நம் நாடு' இதழின் 3-வது ஆண்டு துவக்க நாளையொட்டி, 15-6-55ல், அலுவலகத் தோழர்கள் தமக்களித்த பாராட்டுரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் சொன்னார் :—

" 'நம் நாடு' ஆசிரியப் பகுதியின் முழுப் பொறுப்பையும் துவக்கத்திலிருந்து தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்கள் ஏற்று நடத்தி வந்திருக்கிருர்; இழிவையும் பழியையும் தாங்கிக்கொண்டு, கடமையாற்றியதாக அவர் குறிப்பிட்டார்; அதற்காக, அவர் நம்மால் பாராட்டப்பட வேண்டியவர் என்றாலும், அவருக்கும், நமது இயக்கத்திற்கு முள்ள தொடர்பின் ஆண்டுகளைக் கணக்கிட்டால், அவர், இதனைக் காட்டிலும் வேறு பெரும் பொறுப்புகளை—இதனை விட அதிகமான இழிவையும், பழியையும் தாங்கிக்கொண்டு மேற்கொள்ள வேண்டியவர்.

" அதைப் போலவே, நிர்வாகியாயிருந்து பணிபுரிந்து வரும் பொன்னம்பலனார் அவர்கள், நாங்கள் எல்லாம் பள்ளிப் பருவத்திலிருந்த கால முதல் நமது இயக்கத்தின் வாழ்வுடன் தங்கள் வாழ்வை ஒப்படைத்து கஷ்ட நஷ்டங்களை ஏற்றுக்கொண்டு பணி புரிந்து வருபவர்கள்; அவர்களின் திறமையான பணியும் நமக்குக் கிடைத்திருக்கிறது.

" எங்களுக்கு வருத்தமெல்லாம், நீண்டகாலமாக இயக்கத்துடன் தொடர்புகொண்ட அவர்களுக்கு இப்போது தகுந்த வாய்ப்பினையும் வசதிகளையும் செய்துதர முடியவில்லையே என்பதுதான்.

" 'நம் நாடு' பெரிதாக வளர்ந்து, உலகச் செய்திகளுக்கெல்லாம் இடம் தந்து, பலருக்கும் பயன்பட வேண்டும் என்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் பொறுப்பை, பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிருர்கள்.

" 'நம் நாடு' பெரிதாகி, நமக்கெல்லாம் நல்ல வாய்ப்பும், மகிழ்ச்சியும் தரும் என்று நான் நம்புகிறேன்; நீங்களும் நம்புகிறீர்கள்; கழகத் தோழர்களும், மக்களும், நம்புகிருர்கள்; நெடுஞ்செழியன் அவர்களும் நம்புகிருர்கள்.

" எனவே, கழக வளர்ச்சிக்கான காரியத்தில் ஈடுபட்டிருக்கும் நீங்கள், உங்களின் முழு ஒத்துழைப்பையும் என்றும்போல் தொடர்ந்து தரவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்;

" இப்படி ஒரு விருந்தும், விழாவும் ஏற்பாடு செய்த உங்களுக்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

★

விழா நிகழ்ச்சி

'நம் நாடு' இதழின் மூன்ரும் ஆண்டு துவக்க நாளான 15-6-55 அன்று 'நம் நாடு' அலுவலகத் தோழர்கள் அண்ணா அவர்களுக்குப் பாராட்டும், ஆசிரியர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பும் வழங்கினர்.

விழாவை ஒட்டி 'நம் நாடு' அலுவலகமான 'அறிவகம்' கழகக் கொடிகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு அழகுடன் மிளிர்ந்தது.

துவக்கத்தில், அலுவலகத் தோழர்கள், அண்ணா, ஆசிரியர் ஆகியோருடனிருந்து புகைப்படம் பிடித்துக் கொண்டனர்.

பின்னர், இனியதொரு தேநீர் விருந்து நடத்தப்பட்டது.

ஒலிப்பதிவு செய்யப்பட்டு வழங்கப்பட்ட இன்னிசை, தேநீர் விருந்தினைச் சிறப்பித்தது.

விருந்து முடிவுற்றதும், பாராட்டு, வரவேற்பு விழா துவங்கிற்று.

தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் அனைவரையும் வரவேற்று, விழாவினுக்குத் தலைமை தாங்கி நடத்தித் தருமாறு, அலுவலக நிர்வாகியான தோழர் அ. பொன்னம்பலனார் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

தோழர் காஞ்சி - கல்யாணசுந்தரம் அவர்கள் அதனை வழி மொழிந்ததும், தோழர் பொன்னம்பலனார் அவர்கள் தலைமை ஏற்று விழா குறித்து விளக்கம் தந்தார்.

பின், அண்ணா அவர்களுக்கும், நெடுஞ்செழியன் அவர்களுக்கும், தோழர்களின் மகிழ்ச்சி ஆரவாரப் பேரொலிக்கிடையே தலைவர் மலர் மாலை அணிவித்து, பாராட்டு, வரவேற்பு இதழ்களை வாசித்தளித்தார்.

அடுத்து தோழர் காஞ்சி - கல்யாணசுந்தரம் அவர்கள் சிறியதொரு உரை நிகழ்த்தினார்.

பின்னர், ஆசிரியர் நெடுஞ்செழியன் அவர்கள், தமக்குத் தரப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துச் சொற்பொழிவாற்றினார்.

அடுத்து, அண்ணா அவர்கள் சீரியதோர் கருத்துரை வழங்கினார்; தமக்குத் தரப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இறுதியாக தலைவர் முடிவுரை ஆற்றியதும், தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் நன்றி நவில விழா இனிது முடிவுற்றது.

விழா நிகழ்ச்சிகள் அத்தனையும் ஒலிப்பதிவு செய்யப்பட்டன.

விழாவிற்கு தோழர்கள் என். வி. நடராசன், எஸ். கசேந்திரன், கே. எம். சண்ணபிரான், இளம்பரிதி, எஸ். எஸ். பி. லிங்கம், கே. பி. சுந்தரம் ஆகியோர் வருகை தந்து சிறப்பித்தனர்.

விழாவின் வெற்றி, அனைவரையும் மகிழ்ச்சிப் பெருக்கில் ஆழ்த்திற்று.

'பொறுப்பை உணர்வேன்-கடமை ஆற்றுவேன்'

தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் உறுதிமொழி

" பத்திரிகை உலகோடு ஒப்பிடும்போது நமது 'நம் நாடு' அளவில் மிகச் சிறியதுதான்; ஆனால், சிற்றுளி ஒன்று பெரிய மலையையும் தகர்ப்பதுபோல, நமது சிறிய ஏடு, அதன் எதிரிகளைத் தோற்கடித்து வெற்றி பெற்றிருக்கிறது என்றே கருதுகிறேன்.

'நம் நாடு' இதழின், ஆசிரியப் பகுதிப் பொறுப்பு என்னிடம் தரப்பட்டிருக்கிறது. அந்தப் பொறுப்பை, நான், நடுநிலையில் இருந்து இழி சொல்லையும், பழிச்சொல்லையும் தாங்கிக்கொண்டே செய்து வந்திருக்கிறேன்.

" 'நம் நாடு' கடந்த சமீப காலத்தில் தி. மு. கழகம் நடத்திய மூன்று பெரும் போராட்டங்களின்போதும், அதனைத் தொடர்ந்தும் ஆற்றி வந்திருக்கிற பணி சாதாரணமானதல்ல; வேறு எந்த இதழ்களும்—காங்கிரஸ் ஏடுகளால்கூட முடியாத அளவு நமது கழகத்தின் இலட்சியத்தைத் திறம்பட நாட்டு மக்களுக்குத் தெரிவிக்கும் பணியில் 'நம் நாடு' வெற்றி பெற்றிருப்பதாகவே கருதுகிறேன்.

" எப்போதும் போல் நான் எனது பொறுப்பினைத் தொடர்ந்து கூடுமான வரையில் திறம்பட நிறைவேற்றுவேன் என்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் பொதுச் செயலாளரும், ஆசிரியருமான நெடுஞ்செழியன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்."

—என்று, 'நம் நாடு' அலுவலகத் தோழர்கள் நடத்திய பாராட்டு—வரவேற்பு விழாவின்போது, தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டார்.

கழக வளர்ச்சி 'நம் நாடு' இதழைப்பொறுத்தது

பொதுச்செயலாளர் விளக்கம்

" 'நம் நாடு' அலுவலகத் தோழர்கள் என்னை வரவேற்கவும், அண்ணா அவர்களுக்கு தோழர்களின் இதயபூர்வமான பாராட்டினை வழங்கவுமாக நடத்துகிற இந்த விழாவில் கலந்துகொள்வதில் மகிழ்கிறேன்; 'தோழர்களின் ஒத்துழைப்பும், அண்ணா அவர்களின் கருத்துரையும் என்றும் கிடைக்கும்,' என்ற நம்பிக்கையில்தான், நான், பொதுச் செயலாளர் பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருக்கிறேன்;

" அண்ணா அவர்களிடம் பணியாற்றிய நீங்கள், எத்தனை உற்சாகத்துடன் உழைத்தீர்களோ அத்தனை உற்சாகத்துடனும், ஊக்கத்துடனும் நீங்கள் பணியாற்றுவீர்கள் என்ற உங்களின் உறுதிமொழி, எனக்கு, எனது பொறுப்புகளை நிறைவேற்றுவதில் பெரும் துணையாயிருக்குமென நம்புகிறேன்.

" 'நம் நாடு' இதழ், தி. மு. கழகத்தை வளர்ப்பதில் பெரும் பங்கேற்றிருக்கிறது; கழக வளர்ச்சிக்காக 'நம் நாடு' ஆற்றியுள்ள பணி மகத்தானதாகும்;

" நீங்கள் வெறும் பணியாளர்கள் என்ற முறையில் இங்கு உழைத்து வரவில்லை; தி. மு. கழகக் கொள்கைகளில் நீங்காப் பற்றும், அவற்றின் வளர்ச்சியில் தணியா ஆர்வமும் கொண்டு நீங்கள் உழைத்து வருகிறீர்கள் என்பதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம்;

" 'நம் நாடு' இதழைப் பெரிய அளவில் கொண்டு வரும் பொறுப்பு, இப்போது என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது; அதற்கான முயற்சியில் நாம் ஈடுபட்டு வருகிறோம்; 'நம் நாடு' இதழ் பெரிதாகி வளர்ந்து, நம் கழக வளர்ச்சிக்கு ஆக்கந்தேடும் என்பதில் ஐயமில்லை; வரும் மாநில மாநாட்டில் அதுபற்றி நல்லதோர் முடிவினை நாம் மேற்கொள்ளுவோம்."

" என்பால் நீங்கள் கொண்டுள்ள அன்பிற்கும், நம்பிக்கைக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதுடன், நீங்கள், 'நம் நாடு' திறம்பட நடைபெற என்றும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்."

—என்று, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 'நம் நாடு' அலுவலகத் தோழர்களின் வரவேற்பில் குறிப்பிட்டார்.

தூத்துக்குடி நகர தி.மு. கழக உறுப்பினர்கட்கு

"20—5—55 மாலை 5-30 மணிக்கு, தூத்துக்குடி, வடக்கூர் தி. மு. கழக உடற்பயிற்சிக் கழகத்தில், தூத்துக்குடி நகர தி.மு.க. உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அதுபோது, வரவு-செலவு கணக்கு, கழகக் கட்டிடம் வாங்குதல், அண்ணா சுற்றுப் பயணம், செயலாளரால் கொண்டுவரப்படும் இதர விஷயங்கள் ஆகியவை பற்றி முடிவு செய்யப்படும்,"

என, தூத்துக்குடி நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் எம். எஸ். சிவசாமி அறிவிக்கிறார்.

தி. மு. க. பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் குடந்தைவருகை

18-6-55 மாலை 6½ மணிக்கு, குடந்தை அரண்மனைத் தோட்டத்தில், தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் சார்பில், தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்குப் பாராட்டுக் கூட்டம்—மாநில மாநாட்டு நிதியளிப்பு நடைபெறும்.

தோழர் கே. கே. நீலமேகம் தலைமை தாங்குவார்.

தோழர்கள் என்.எஸ்.இளங்கோ, க. அறிவழகன் மற்றும் பலர் பாராட்டுரையாற்றுவர்.

* * *

நிகழ்ச்சி நிரல்

காலை 6 மணிக்கு: புகைவண்டி நிலையத்தில் பொதுச்செயலாளர் வரவேற்பு.

காலை 8 மணிக்கு: நாகேச்வரன் சன்னதியில் திருமணம்.

காலை 10 மணிக்கு: கொரநாட்டுக் கருப்பூர் ஊராட்சி மன்ற வரவேற்பு; அண்ணா படத் திறப்பு விழா

காலை 10½ மணிக்கு: சத்திரங்கருப்பூர் தி. மு. கழக கிளை துவக்க விழா.

காலை 11 மணிக்கு: நகரின் பல பகுதிகளில் கொடியேற்று விழா.

மாலை 3 மணிக்கு: துவரங்குறிச்சி வடக்கு வீதியில் பணியாளர் கூட்டம்.

மாலை 4 மணிக்கு: புகைவண்டி நிலையத்திலிருந்து ஊர்வலம்.

மாலை 6 மணிக்கு: அரண்மனைத் தோட்டத்தில் பொதுக்கூட்டம்.

அண்ணாதுரை

சுற்றுப்பயணம்

18—6—55: மாலை 6 மணிக்கு: விருத்தாசலம் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்.

19—6—55: காலை 10 மணிக்கு: திருச்சி-திருமண நிகழ்ச்சி; மாலை 6 மணிக்கு: திருச்சி மாவட்ட தி. மு. கழகச் சார்பில் மாநில மாநாட்டு நிதியளிப்பு-பாராட்டுக் கூட்டம்.

20—6—55: மாலை 6 மணிக்கு: பேராவூரணி: மாநில மாநாட்டு நிதியளிப்பு-பொதுக் கூட்டம்.

21—6—55: மாலை 6-மணிக்கு: பட்டுக்கோட்டை: மாநில மாநாட்டு நிதியளிப்பு-பொதுக் கூட்டம்.

22—6—55: மாலை 6 மணிக்கு: முத்துப்பேட்டை: மாநில மாநாட்டு நிதியளிப்பு-பொதுக் கூட்டம்.

23—6—55: காலை: வேலூர் திருமண நிகழ்ச்சி; மாலை 6 மணிக்கு: மாயவரம்: மாநில மாநாட்டு நிதியளிப்பு-பொதுக்கூட்டம்

இந்நிகழ்ச்சிகளில் அண்ணா அவர்களுடன் தோழர் அ. பொன்னம்பலனார், தோழர் கே. ஏ. மதியழகன் ஆகியவர்களும் கலந்து கொள்வார். தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ அவர்களும் தஞ்சை மாவட்ட சுற்றுப்பயண நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வார்.

* * *

குறிப்பு:— 18-6-55 காலை 10 மணிக்கு உளுந்தூர்ப்பேட்டையில் நடைபெறவிருந்த ஆண்டு விழா—பெயர் சூட்டு விழா நிகழ்ச்சிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.